இதழ் -57

01.03.2023

# துமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# பள்ளிக்கூடங்களை மூடாதீர்கள்..!




யாழின் கல்வி பண்பாட்டின் இன்றைய நிலை பெரும் விமர்சனத் தளங்களுக்குள் பயணிப்பதே அண்மைய நிலவரமாக காணப்படுகிறது. குறிப்பாக பெப்ரவரி(2023) இறுதியில், மாணவர்கள் இல்லாத காரண த்தால் நீர்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதாக செய்திகள் சமூக வலைத்தளங்களில் உலாவப்பட்டதை தொடர்ந்து அது தொடர்பான உரையாடல் முதன்மை பெறலாயிற்று. மறு தளத்தில் மாணவர்களின் கல்வி இடைவிலகல்களின் எண்ணிக் கையும் அண்மைய ஆண்டு தரவுகளில் அதிகரித்து வருவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. “2022ஆம் ஆண்டில் 519மாணவர்கள் இடைவிலகியுள்ளதோடு, 2020ஆம் ஆண்டு 485ஆகவும், 2021ஆம் ஆண்டு ஆயிரத்து 105 ஆகவும் இருந்துள்ளது.

ஒருபுறம் நகர்ப்புற பாடசாலைகளில் ஒரு வகுப்பில் பத்துப்பிரிவுகள், ஒவ்வொரு பிரிவிலும் ஐம்பது மாணவர்கள் என்று கற்கக்கூடிய சூழல் இல்லாத நெருக்கமான நிலை காணப்படும் அதேவேளை கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களே இல்லாத நிலை காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது. நகர்ப்புறம் நோக்கிய எமது சமூகத்தின் ஓட்டத்தின் அங்கங்களாகவே இவற்றை பார்க்க முடிகிறது.

நகர்ப்புற பாடசாலைகளுக்கு சரிநிகராக கிராமப்புற பாடசாலைகளும் இருந்த காலங்கள் உண்டு. பல்வேறு காரணங்களால் இந்த நகர்ப்புற, கிராமப்புற கற்றல்ச் சமநிலை குழப்பமடையச் செய்யப்பட்டுள்ளது. இவற்றின் காரணங்கள் கண்டறியப்பட்டு மீண்டும் ஆரோக்கியமான கற்றல்ச்சூழல் கிராமப்புறங்களிலும் உருவாக வேண்டும்.

பலபேருக்கு கற்பித்த கல்விக்கூடத்தை மூடுவதென்பது எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஒரு கிராமத்தின் வரலாற்று இருப்போடு சம்பந்தப்பட்டவை கல்விச் சாலைகள். வாய்ப்புக்களும் வளங்களும் எல்லா பாடசாலைகளிலும் சமமாக கிடைக்க அந்தந்த கிராமத்தவர்கள் வழிகளைக் கண்டறிந்து முயலுங்கள்.

*’பள்ளிக்கூடங்கள் கருவறை போன்றவை!*
*காப்பாற்றுங்கள்!’*

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி
பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 நிறங்கள் சொல்லட்டும் நல்ல செய்தி

22 சித்திராங்கதா

10 யாருக்கு நோபல் பரிசு?

27 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்

11 பரியாரியார் Vs அய்யர்

32 ஆரம்பிக்கிறது WPL

15 யோகா எனும் வெண்ணெய்

18 இலங்கையில் மனித உரிமைகள் நிலை என்ன?



## நிறங்கள் சொல்லட்டும்

# நல்ல செய்தி...!

ஒரு வரண்டு போன சந்தை வெளி. சுற்றிலும் அமைதி ஆட்சி செய்கிறது. திறந்த கிடந்த கடைகளின் கதவுகளும் ஜன்னல்களும் காய்ந்து கிடக்கும் பசித்த வாய்கள் போல் வெறுச்சோடிக் கிடந்தன. மக்கள் கூட்டமென்று சொல்வதற்கும் யாருமில்லை. ஏன் ஒரு பிச்சைக்காரர் கூட அவ்விடத்தில் இல்லை.

அந்த அமைதியான சந்தைக் கடை வழியே ஒரு உத்தியோகபூர்வ போலீஸ் அதிகாரி தனது புத்தம் புதிய மேலங்கியை அணிந்து கொண்டு நடந்து வருகிறார். "ஓச்சுமிலோப்" என்பது அவரது பெயர். ஓச்சுமிலோப்பை பின்தொடர்ந்து அவரது உதவி அதிகாரி ஒருவர் கைநிறைய அந்த சந்தைக்கடைகளில் பறிமுதல் செய்ய பழங்களை ஏந்திக் கொண்டு நடந்து வந்தார்.

நிலவிக் கொண்டிருந்த அந்த அமைதியினை குலைத்து திடீரென்று யாரோ அங்கு கூக்குரலிடும் ஓசை ஓச்சுமிலோப்புக்கு கேட்டது.

"என்னையே நீ கடித்துவிட்டாயா? கேடு கெட்ட மிருகமே! இப்போதெல்லாம் நாய்கள் யாருக்கும் கடிக்க அனுமதி இல்லை. உன்னை என்ன செய்கிறேன் பார்!"

அந்த சத்தத்தோடு ஒரு நாய் குரைப்பதும் கூடவே கேட்டது. ஓச்சுமிலோ..ப் சத்தம் வந்த திசைக்கு விரைந்தார். ஒரு நாய் மூன்று கால்களில் நொண்டி நொண்டி ஒரு மரத் தொழிற்சாலையிலிருந்து வெளியே ஓடுவதைக் கண்டார்.

பொத்தான்கள் ஒழுங்காக பூட்டாத வெள்ளைச் சட்டை அணிந்த ஒருவன் அந்த நாயைத் துரத்திக் கொண்டிருந்தான். வேகமாக ஓடிய அந்த மனிதன் நாயின் கால்களை நெருங்கியதும் திடீரென்று தடுமாறி கீழே விழுந்தான். ஆனாலும் அவன் விழுந்த விதத்திலேயே முன்னோக்கிச் சென்று நாயின் பின்னங்கால்களை பிடித்து விட்டான். மீண்டும் நாயின் அலறல் சத்தம் கேட்டது.

கடைகளின் ஜன்னல்களில் தூங்கிக் கொண்டிருந்த முகங்கள் அந்த மரத்தொழிற்சாலை வாசலை நோக்கி விரைந்தன. சிறிது நேரத்தில் ஒரு கூட்டம் தரையில் இருந்து துளிர்விட்டது போல் அந்த மரத் தொழிற்சாலை முற்றத்தைச் சுற்றி திரண்டது.

"யாரோ சிலர் சண்டை போடுற மாதிரி இருக்கு சார்." என்றார் அந்த போலீஸ் உதவி அதிகாரி.

ஒச்சுமிலோ.்.ப் அந்தக் கூட்டத்தை நோக்கி நகர்ந்தார். மரத்தொழிற்சாலையின் வாயிலுக்கு அருகில் அந்தப் பொத்தான்களை ஒழுங்காக பூட்டாத மனிதன் தனது வலது கையை உயர்த்தி, இரத்தம் வடியும் விரலைக் காட்டிக் கொண்டிருந்தான். அரைகுறையாகக் குடித்த போதைக்காரன் போலிருந்தது அவனது முகம். அந்த முகத்தோடு நாயை பார்த்து

"பொறு. பொறு.. இதற்கு நான் உன்னைப் என்ன செய்கிறேன் பார்.. உன்னிடமிருந்து எதுவும் அறவிடாமல் விடமாட்டேன், முரட்டு நாயே!"

ஒச்சுமிலோ.்.ப் அந்த மனிதனை அடையாளம் கண்டுகொண்டார். அவன் ஹிரியுகின். பொற்கொல்லன்.

கூட்டத்தின் மையத்தில் அதன் முன்னங்கால்களை விரித்து தலை முதல் கால் வரை நடுங்கிக் கொண்டு முழுப் பிரச்சனையின் குற்றவாளியாகக் கிடந்தது ஒரு வெள்ளை நாய்க்குட்டி - ஒரு கூர்மையான மூக்கு மற்றும் முதுகில் மஞ்சள் புள்ளியுடன். அதன் கண்ணீர்க் கண்களில் அவலமும் பயமும் தெரிந்தது.

"இங்கு என்ன நடக்கிறது? " என்று ஒச்சுமிலோ.்.ப் கூட்டத்தினூடாக நுழைந்து உரத்துக் கேட்டார்.

"நீ ஏன் இங்கிருக்கிறாய் ஹிரியுகின்? உன் விரலுக்கு என்ன நடந்தது? யார் இப்படிச் செய்தது?"

"சார், நான் ஒரு ஆட்டுக்குட்டியைப் போல மிக சாதுவாகதான் நடந்து வந்து கொண்டிருந்தேன்" என்றான் ஹிரியுகின்.

"சார், நான் யாரையும் எதையும் இங்கு தொடவில்லை, திடீரென்று இந்த



சபிக்கப்பட்ட மிருகம் என் விரலைக் கடித்து விட்டது . மன்னிக்கவும் சார். நான் வேலை செய்பவன் எனக்கு என் விரலினால் செய்யவேண்டிய மிகவும் நுட்பமான வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் இந்த விரலை ஒரு வாரத்திற்கு இனி என்னால் பயன்படுத்த முடியாது! அதனால் யாராவது எனக்கு இதற்காக நட்டஈட்டுப்பணம் கொடுக்க வேண்டும். கடிக்கும் நாய்களை பொறுக்க வேண்டும் என்று சட்டத்தில் எதுவும் இல்லை சார். இப்படி இவற்றை கடிக்க அனுமதித்தால் என்னைப் போன்றோரின் வாழ்க்கையே வாழத் தகுதியற்றதாகி விடும்."

"ஹ்ம்ம். புரிகிறது," என்று ஓச்சுமிலோ.ஃ.ப் கடுமையாகச் சொன்னார்.

புருவங்களை மேலும் கீழும் அசைத்தார்.
"இப்போது, இது யாருடைய நாய் என்று எனக்கு தெரிந்தாக வேண்டும்? இந்த விடயத்தை நான் சும்மா விடமாட்டேன். உங்கள் நாய்களை நீங்கள் இனிமேல் இப்படி அவிழ்த்து ஓட விடாதபடி நான் உங்களுக்கு பாடம் கற்பிக்கப் போகிறேன்! விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியாத நபர்களிற்கு ஏதாவது செய்ய வேண்டிய நேரம் இது. உரிமையாளரை நிச்சயம் தண்டிக்க வேண்டும். நான் யார் என்பதை அவருக்குக் காட்டுவேன்! யெல்டிரின்." என்று உதவி அதிகாரியின் பக்கம் திரும்பினார். அந்த உதவி அதிகாரியின் பெயர் தான் யெல்டிரின்.

"அது யாருடைய நாய் என்பதைக் கண்டுபிடித்து அறிக்கை எழுது. இல்லாவிட்டால் நாய் தாமதமின்றி கொல்லப்படும். எப்படியிருந்தாலும், இது ஒரு பைத்தியக்கார நாய். இதனால் ஆபத்தே அதிகம். இது யாருடைய நாய் என்று இங்கு யாருக்காவது தெரியுமா?"

"ஜெனரலின் நாய் போல் இருக்கிறதே" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

"ஜெனரலுடையதா? ம்! " யெல்டிரின், என் மேலங்கியைக் கழற்று. பயங்கர சூடாக இருக்கிறது! அநேகமாக இன்று மழை பெய்யும் போல.." பொற்கொல்லனிடம் திரும்பி ஓச்சுமிலோ.ஃ.ப் தொடர்ந்தார்.

"எனக்கு புரியாத ஒன்று இருக்கிறது, ஹிரியுகின் ???? அந்த நாய் உன்னை எப்படி கடிக்க முடியும்? அதற்கு உன் விரல்கள் எப்படி எட்டியிருக்கும். அது ஒரு சின்னஞ்சிறிய நாய். நீ ஒரு பெரிய வளர்ந்த மனிதன். அது உன் விரல்களை கடித்திருக்க வாய்ப்பேயில்லையே. ஒருவேளை உன் விரல் தெரியாமல் ஒரு ஆணியில் குத்தி காயப்பட்டிருக்கலாம். பிறகு இந்த நாயைக் கண்டதும் உனக்கு இப்படியொரு எண்ணம் ஏற்பட்டுள்ளது. அதை வைத்து நீ கொஞ்சம் பணம் பெற முயற்சிக்கிறாய். அப்படித்தானே! உன்னைப்போன்றோரை பற்றி நான் நன்கு அறிவேன். நீ ஒரு ஊரை ஏமாற்றுகிற அயோக்கியன்!"

"அவன் நாயின் முகத்தில் ஒரு சிகரெட்டைக் குத்தினான். அதனால தான் அந்த நாய் திமிறி

அவனை கடிச்சுது சார்.” கூட்டத்தில் இன்னொருத்தன் சொன்னான்.

“இல்லை பொய்! நான் அப்படிச் செய்ததை நீ பார்த்தாயா? ஏன் பொய் சொல்கிறாய்? நீ சொல்வதை எல்லாம் இவர் நம்பிவிடுவார் என்று நினைக்கிறாயா? அவர் அதிசிறந்த புத்திசாலி. யார் உண்மையைச் சொல்கிறார்கள், யார் பொய் சொல்கிறார்கள் என்பது அவருக்கு நல்லாவே தெரியும். நான் பொய் சொன்னால் அதை நீதிமன்றமே முடிவு செய்யட்டும். இன்று நாம் அனைவரும் சமம் என்று சட்டம் சொல்கிறது. எனக்கு போலீசில் ஒரு சகோதரர் கூட இருக்கிறார். என்ன நடந்தென்று நானே சொல்கிறேன்.. என்னவென்றால்..”

“சரி. சரி.. உன் வாக்குவாதத்தை நிறுத்து!”
உரத்து கத்தினார் ஓச்சுமிலோஃப்.

“இல்லை சார், இது ஜெனரலின் நாய் அல்ல” என்று அந்த உதவி அதிகாரி சிந்தனையுடன் கூறினார்.

“ஜெனரலிடம் இப்படி நாய்கள் கிடையாது. அவருடைய நாய்கள் வேறு.”

“உண்மையாகவா யெல்டிரின்?”

“ஆம் சார்.. நிச்சயமாக இருக்க வாய்ப்பில்லை என்றே நினைக்கிறேன்.”

“எனக்கும் அது தெரியும் யெல்டிரின்... ஜெனரலிடம் விலையுயர்ந்த இன நாய்களே உள்ளன, ஆனால் இந்த நாய்! இதற்கு முடியும் இல்லை. ஒரு வடிவம் கூட இல்லை. மக்கள் ஏன் நாய்களை இப்படி கேவலமாக வளர்க்கிறார்கள்? இப்படியொரு நாய் நம் தலைநகரில் மட்டும் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? அங்கு சட்டத்தைப் பற்றி யாரும் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். உடனே இந்த நாயின் கழுத்தை நெரித்து கொன்றிருப்பார்கள்! ஹிரியுகின், நீ தான் இங்கு பாதிக்கப்பட்டவன். அதுவும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு நிற்கிறாய். இந்த விடயத்தை நிச்சயம் ஓய விடமாட்டேன். உரிமையாளருக்கு உகந்த பாடம் கற்பிக்க போகிறேன் பார்..!”

“ஆனால் ஒருவேளை அது ஜெனரலின் நாய்..”
என்று உதவி அதிகாரி சத்தமாக யோசித்தார்.

“ஒரு நாள் ஜெனரல் வீட்டு முற்றத்தில் இப்படி ஒரு நாயைப் பார்த்த ஞாபகம்”

“நிச்சயமாக அது ஜெனரலுடையதுதான்” என்று கூட்டத்தில் அந்தக் குரல் மீண்டும் கேட்டது.

“யெல்டிரின், என் கோட்டை தயவு செய்து எனக்கு அணிவித்து விடு. குளிராக இருக்கிறது. காற்று எழுந்து வருகிறது. எனக்கு நடுங்குகிறது. நாயை ஜெனரலிடம் அழைத்துச் சென்று அங்கேயே கேளுங்கள். நான்

கண்டுபிடித்து அனுப்பினேன் என்று நிச்சயம் ஜெனரலிடம் சொல்லுங்கள். மேலும் நாயை தெருவில் விட வேண்டாம் என்றும் சொல்லுங்கள். இது ஒரு விலையுயர்ந்த நாயாக இருக்கலாம். தெருவில் சில பன்றிகள் ஒரு சிகரெட்டைக் இதன் மீது குத்தினால், இது விரைவில் இறந்துவிடும். நாய் ஒரு மென்மையான உயிரினம். ஏய், முட்டாளே, உன் கையை கீழே போடு! உன்னுடைய அந்த முட்டாள்தனமான விரலை மீண்டும் என்னிடம் காட்டாதே. இது நீயே உனக்கு தேடிக்கொண்ட தண்டனை".

"இதோ ஜெனரலின் சமையல்காரர் வருகிறார். அவரிடமே கேட்போம். வணக்கம், புரோகோர், ஒரு நிமிடம் இங்கே வா! பார், அந்த நாய் உங்களுடையதா?" கூட்டத்தில் ஒருவன் கேட்டான்.

"எந்த நாய்? இப்படி ஒரு நாய் என் வாழ்நாளிலே நான் கண்டதில்லை!" என்றான் அந்த சமையல்காரன் புரோகோர்.

"சுற்றிச் சுற்றிக் கேட்டு நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை," என்று ஓச்சுமிலோஃப் உரத்துச் சொன்னார்.

"இது ஒரு தெரு நாய். இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை. தெருநாய் என்று நான் சொன்னால் இது ஒரு தெருநாயே தான்! இதை இப்போதே கொன்றாக வேண்டும்!"

"இது எங்கள் நாய் அல்ல தான்" சமையல்காரன் புரோகோர் தொடர்ந்தான். "ஆனால் இது ஒரு வேளை தலைநகரிலிருந்து வந்த ஜெனரலின் சகோதரருக்கு சொந்தமானதாக இருக்கலாம். என் எஜமானருக்கு இந்த மாதிரி நாய் எல்லாம் பிடிக்காது, ஆனால் அவருடைய சகோதரருக்கு பிடிக்கும்."

"அண்ணன் வந்து விட்டாரா?" என்று ஓச்சுமிலோஃப் கேட்டதும், அவர் முகத்தில் மகிழ்ச்சியான புன்னகை பரவியது. "அடடே! எனக்கு அது தெரியாதே! அவர் மீண்டும் இங்கு வந்துவிட்டாரா?"

"ஆமாம் சார், ஒரு சில நாட்கள் இங்கு தங்குவாராம்."

"நல்லது..நல்லது.. நல்லது.. எனக்கு தெரியாமல் போய்விட்டதே... அப்படியானால் இது நம் ஜெனரலின் அண்ணனுடைய நாய் என்கிறாயா? மிகவும் நல்லது, மிக்க மகிழ்ச்சி! இந்த குட்டி நாயை அழைத்துச் செல்லுங்கள்! என்ன ஒரு கலகலப்பான குட்டி நாய். துடிதுடிப்பான குட்டி நாய்.. இந்த பெரிய மனிதனின் விரலையே ஒடிக்கிறதே! ஹஹஹா... செல்லக் குட்டி நாயே ஏன் இப்படி நடுங்குகிறாய்? ர்ர்ர் ... ர்ர்ர்ர் ... இந்த மனிதன்.. ஹீரியுகின் ஒரு வில்லன். நீ பயப்படாதே!" என்று நாயுடன் செல்லமாக பேசி அனுப்பி வைத்தார் ஓச்சுமிலோஃப்.

புரோகோர் நாயை அழைத்துக் கொண்டு நடந்து சென்றான். கூட்டம் ஹீரியுகினைப் பார்த்து சிரித்தது.

"உன்னை ஒரு நாள் நிச்சயம்

பிடிப்பேன்!" என்று ஓச்சுமிலோஃப் ஹீரியுனை மிரட்டிவிட்டு, தன் மேலங்கியைப் போர்த்திக்கொண்டு, சந்தைப் பகுதியைத் தாண்டிச் சென்றார்.

அன்றைய ரஷ்ய சமுதாயத்தைப் பற்றிய நையாண்டியாக அன்டன் சொகோவ் எழுதிய, "பச்சோந்தி" (The chameleon) என்கிற கதையையே இதுவரை வாசித்துக் கொண்டிருந்தீர்கள். இது அன்றைய காலம் மட்டுமல்ல் இன்றும் என்றும் மனித நடத்தைகள் பற்றிய கடுமையான உணர்வையே இந்தக் கதை புலப்படுத்துகிறது. பொதுவாக, நமது நடத்தை சரியானதா என்பதைப் பொருட்படுத்தாமல், நமது தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப எல்லோரும் மாறுகிறோம். ஓச்சுமிலோப் கதாபாத்திரத்தை வெளியில் மட்டும் தேடாதீர்கள். உங்களுக்குள்ளும் தேடிப்பாருங்கள்.

எவ்வாறாயினும், உண்மையில், நாம் ஒரு அதிகாரமிக்க சமூகத்தால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். முடிவெடுப்பதில் சக்தி எம்மிடையே ஒப்பீட்டளவில் போதுமானதாக இல்லை. ஓச்சுமிலோப் தன் எண்ணப்படி கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவரை பலிகடா ஆக்கியிருக்கலாம். பச்சோந்தியாக இருப்பது தந்திரமல்ல. பிழைக்கும் ஒரு வழியாக மாறிவிட்டது.

பச்சோந்திகள் இடத்துக்கு தகுந்த மாதிரி தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் என்றுதான் பெரும்பானமையனவர்கள் நினைக்கிறார்கள். அது அத்தனை உண்மையில்லை. இடத்தைவிட பச்சோந்தி தனது எண்ணத்துக்கு ஏற்றபடிதான் தன் நிறத்தை மாற்றிக்கொள்கிறது என்பதுதான் உண்மை. அது அப்படி நிறம் மாறினால் சுற்றி இருப்பவர்களுக்கோ அல்லது மற்ற பச்சோந்திகளுக்கோ ஏதோ ஒரு செய்தி சொல்கிறது என்று அர்த்தம். நிறம் செய்தியை சொல்கிறது.

உங்கள் நிறமும் உலகிற்கு நல்ல செய்தியை சொல்லட்டும். மற்றோர் நிறமும் சொல்லும் செய்தி தெளிவாய் புரிந்து போகட்டும்.

**தூரி அரசியல் பேசுவதில்லை.**
**இப்போதும் பேசவில்லை.**



# யாருக்கு நோபல் பரிசு?

இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு மொத்தம் 305 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக நோபல் நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது. ஆனால் அந்த பட்டியலில் உள்ள பெயர்கள் குறித்து தெரிவிக்கவில்லை. நோபல் சட்டத்தின்படி, பரிந்துரை செய்யப்பட்டவர்களின் அடையாளம் 50 ஆண்டுகளாக ரகசியமாக வைக்கப்படுகிறது. ஆனால் பரிந்துரைக்க தகுதியுடையவர்கள், தாங்கள் முன்மொழிந்த நபர் அல்லது அமைப்பின் பெயரை வெளியிடலாம்.

இந்த ஆண்டு அமைதிப் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, துருக்கி அதிபர் ரெசெப் தாயிப் எர்டோகன், நேட்டோ தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் மற்றும் ஒரு சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தை நிறுவ செயல்படும் உக்ரைன் குழுவும் அடங்கும்.




சிறையில் அடைக்கப்பட்ட புடின் எதிர்ப்பாளரும், விஷ தாக்குதலுக்கு ஆளான ஊழல் எதிர்ப்பு ஆர்வலருமான அலெக்ஸி நாவல்னி, பத்திரிகையாளரும் அரசியல் ஆர்வலருமான விளாடிமிர் காரா முர்சா மற்றும் ஜனநாயக ஆதரவு இளைஞர் இயக்கம் வெஸ்னா ஆகியோருக்கும் அமைதிப்பரிசு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும் காலநிலை ஆர்வலர்களான ஸ்வீடனின் கிரேட்டா தன்பெர்க், உகாண்டாவின் வனேசா நகேட், ஈரானிய பெண்கள் உரிமைகள் ஆர்வலர் மசிஹ் அலினெஜாட் மற்றும் அவரது ஹிஜாப் எதிர்ப்பு இயக்கமான மை ஸ்டெல்தி ப்ரீடம், சால்வேஷன் ஆர்மி ஆகிய பெயர்களும் இந்த பட்டியலில் இருக்கும் என நம்பப்படுகிறது.

கடந்த 2016-ம் ஆண்டு அதிகபட்சமாக 376 நபர்கள் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டனர். அதை விட இந்த ஆண்டு சற்று குறைவான பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




# பரியாரியார் VS அய்யர் 6

தொண்டரடிப்பொடியன்

இருமனமும் ஒத்துவிட்ட போதும் அதனை ஒப்புவிக்கும் சுகம்தான் காதலில் ஆதீதமானது. அது தரும் பதற்றத்திற்கும் படபடப்பிற்கும் நிகரான ஒரு அனுபவம் உலகினில் இல்லை. ஏற்றுக்கொண்டால் அடுத்த நொடி உலகத்தின் மிகவும் மகிழ்ச்சியானவர்கள் அவர்கள் தான். ஏற்றுக்கொள்ளாவிட்டால்....? அந்த பயம் தான் இருவரையுமே அதை ஒப்புவிக்க தடுத்துக் கொண்டிருந்தது. மனம், குணம் என் எல்லாம் பிடித்தும் பிறப்பால் வந்த சாதீயம் தடையாகிப்போனால் குடும்பத்தை எதிர்த்து நிற்க இருவருக்குமே விருப்பமில்லை. ஆனால் தடைகளை உடைப்பது தானே காதலின் வேலை. பரதன் துணிந்தான் ஒருநாள்.

“நாளை பங்குனி உத்தரம். கோயிலுக்கு வருவாயா?” பரதன் கேட்கிறான்.

“ஓம் வரத்தானே வேணும்.”

“உன்ட அப்பா வர முதலா? அப்பாவோடயா?”

“நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்க?”

“அப்பா வர முதல்..”

“ஏன்? ”

“முக்கியமான ஒரு விசயம் சொல்ல வேணும்”

“அப்படியா.. பங்குனி உத்தரம் நல்ல நாள்த்தான்.” சொல்லிவிட்டு சிரிக்கிறாள் கௌசல்யா.

“கோயிலும் நல்ல இடம் தானே!” சிரித்துக்கொண்டே பரதனும் சொல்கிறான்.

இதைவிடவா தம் காதலை அவர்கள் ஒப்புவிக்க வேண்டும். சொல்லாமல்ச்

சொல்லும் சுகத்தை பலதடவை அனுபவித்துவிட்ட அவர்களுக்கு சொல்லும் சுகத்தை அனுபவிக்க ஆசை வந்தது. பங்குனி உத்தரமும் வந்தது.

வீட்டில் ஏதேதோ காரணங்களைச் சொல்லிவிட்டு இருவருமே ஆட்கள் வரும் நேரத்திற்கு முன்பே கோயில் வந்துவிட்டார்கள். ஆட்கள் வந்து விடுவார்களோ என்ற பதற்றம் இருவரிடமுமே இருந்தது. பொக்கட்டுக்குள் மடித்து வைத்திருந்த ஒற்றையை எடுத்து கட கடவென வாசிக்கத்தொடங்கினான் பரதன்.

“வேட்டையிடு - இன்றேல்
விட்டுவிடு - எந்தன்
விதியினில் ஊஞ்சலேன்
ஆடுகின்றாய்?- முகம்
காட்டி விடு- இன்றேல்
கரைந்து விடு - வெறும்
கண்தூண்டில் முள்ளுக்கு மீனல்ல
நான் - மன

வீட்டைத் திற - இன்றேல்
பூட்டிவிடு - இந்த
வெளிவாசற் கோலங்கள் போதுமடி
- தீர்ப்புத்

தீட்டிவிடு - இன்றேல்
தீர்த்து விடு - இந்த
திரிசங்கு சொர்க்கங்கள்
தேவையில்லை!

காமன் கணை - ஒரு
கண்பார்வையில் - கொடுங்
காலனின் பாசமோர் கண்பார்வையில்
- ஆமாம்

பூமன்றமா - இல்லை
புதைகுழியா - என்றன்
புகலிடம் என்ன விளக்கிவிடு - இன்று

ஆமென்றுரை - இல்லை
அன்றென்று சொல் - என்றன்
ஆவிக்கோர் தீர்ப்பினைத் தந்துவிடு
- ஒன்று

நாமேன்றுரை - இன்றேல்
நானென்று சொல் - இந்த
நாடகம் இன்றே முடித்துவிடு!”

கவிக்கோவின் கனல் கக்கும் வார்த்தைகளை அப்படியே அவனும் கக்கிவிட்டான்.

பன்னிரண்டு நாட்களாக படாத பாடு பட்டு பாடமாக்கிய கவிதையை ஒரே மூச்சில் ஒப்புவித்து முடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள அடிக்கடி மூச்சு விட்டுக் கொண்டான் பரதன். நந்தவனத்து ஆண்டியாக பானையை போட்டுடைத்துவிட்டோமோ என்கிற பதட்டத்தில் நின்றான்.

காதலை சொல்லிவிட்டு அதன் பதிலுக்காக காத்திருக்கும் நொடிகள் சுகமா? சுமையா? இன்னும் சில நிமிடங்களில் இந்த உலகத்திலேயே மிகவும் சந்தோசமான மனிதனாகவோ, மிகவும் மனப்பாரம் மிக்க மனிதனாகவோ பரதன் இருப்பான். எல்லாம் அந்த பெண்ணரசியின் நா அசைவில்தான் இருக்கிறது. மனிதர்கள் வாழ்வில் காதல் செய்யும் ஆச்சரியங்களுக்குத்தான் அளவேது?

அவள் எதிர்பார்த்ததைத்தான் பரதன் சொல்லியிருக்கிறான். ஆனால்

அவளால் அந்த நொடியை நம்ப முடியவில்லை. கனவில் இந்த காட்சி எப்படி நடக்கும் என்று பலமுறை கற்பனை செய்திருக்கிறாள். ஆனால் இது வித்தியாசமாக நடந்தேறிவிட்டது. ஓவியம் வரையும் தூரிகை கவிக்கோவின் காதல் வரிகளை துணைக்கு அழைக்குமென அவள் எதிர்பார்க்கவில்லை. அதிகம் பேசாதவனாகத்தான் அதுவரை பரதனை கௌசல்யாவிற்கு தெரியும். அவன் இவ்வளவு தைரியமாக தன் காதலை ஒப்புவிப்பான் என்று அவள் நினைத்துக்கூட பார்க்கவில்லை. உள்ளங்கள் இரண்டும் ஏற்கனவே உணர்ந்துவிட்ட போதும், வெளிப்படையாக சொல்லிக் கொள்ளாத காதலின் அந்த சுகத்தை அவள் இன்னும் கொஞ்சக் காலம் அனுபவிக்க இப்போது ஆசைப்பட்டாள். தானும் காதலிக்கிறேனா இல்லையா என்ற பயம் நிறைந்த பரிதவிப்போடு அவன் அவள் முன்னால் ஆடும் கூத்துக்களை நினைத்து நினைத்து நள்ளிரவில் கூட கௌசல்யா சத்தம் போட்டு சிரித்திருக்கிறாள். நான் காதலிக்கிறேன் என்பதை விட காதலிக்கப்படுகிறேன் என்பதையே அவள் பெருமையாக பார்த்தாள். அதுவும் தன் நண்பிகள் பலபேருக்கு மையல் உள்ள ஒருவன் தன் பின்னால் பூனைக் குட்டியாய் சுற்றிவருவதை அவள் அதிகம் எதிர்பார்த்தாள்.

ஆனால்... இதற்கு மேல் அவனைக் காக்க வைக்க முடியாதென்பதை அவள் உணர்ந்து கொண்டாள். தன் முன்னால் முழி பிதுங்கி தன் தலையசைவிற்காக தவம் கிடப்பவனுக்கு வரம் கொடுக்க முடிவெடுத்துவிட்டாள். ஏனென்றால் அவனது தவத்திற்கு சாபம் கொடுத்தால் அது தன் வாழ்க்கைக்கும் சாபமாகிவிடுமென்பதை அவள் உணராமல் இல்லை. இப்பொழுது அவனுக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும்?எப்படித்தெரிவிப்பது?தலை அசைவிலா? கண்ணசைவிலா? ஏதும் அவன் தவறாகப் புரிந்து கொண்டால் பரதன் தவித்துவிடுவானே? வேண்டவே வேண்டாம்! நாவை அசைத்து சொல்லிவிடுவோமென்று முடிவெடுத்தாள். ஆனால் முடியவில்லை! அதுவரை பரதனோடு கதைத்துப் பழகிய அவள் நாவை இப்போது அசைக்க முடியவில்லை! காதல் ஓமோன் சுரந்துவிட்டால் மற்ற நரம்புகள் நம் பேச்சைக்கேட்காது. அவன் கண்களைப் பார்க்க முடியவில்லை!

அதோ! அவளை மீறி வந்த சிரிப்பை மறைத்து கௌசல்யா தலை குனிந்தாள்! அவள் பாதத்தின் முன் விரல்கள் மணலில் காதல் கடிதங்களை வரையத்தொடங்கின. அதன் பெயர்தான் நாணம்! பரதனுக்கு முன்பாக முதன் முதலாக வெட்கப்பட்டாள் கௌசல்யா. அவளில் ஏற்பட்ட மாற்றங்கள் பரதனின் பதட்டத்தை தணித்து, சந்தோசம் தருவதற்கான அறிகுறிகளாகத்தான் இருந்தன. மனம் எங்கும் பட்டாம்பூச்சிகள் பறக்கத் தொடங்கிவிட்டன. ஆனால்... அவனுக்கு அது போதுமானதாக இல்லை. கௌசல்யா வெளிப்படையாக தன் வாய் திறந்து ஒத்துக்கொள்ள வேண்டும். அதுவரை

அங்கேயே அவளையே பார்த்துக் கொண்டிருப்பதாக முடிவெடுத்தான்.

ஒரு நீண்ட மௌனம் கௌசல்யாவால் கலைக்கப்பட்டது.

“இப்ப என்ன வேணும் உமக்கு?”

ஞாபகம் தெரிந்த நாளில் இருந்து இன்றுவரை நீங்கள் வாங்க போங்க என்று கதைத்தவள் முதன் முறையாக “உமக்கு” என்றிருக்கிறாள். இருவருமே சிரிக்காமல் சிரித்துக் கொண்டார்கள்.

“உமக்கா?”

“ஏன் அதிலென்ன உமக்கு?”

“ஓ.. உரிமையில கதைக்கிறியாடிடிடி...?”

“டி...யா?”

“ஏன் வேணாமாடி?”

“பருவாயில்லை இருக்கட்டும்டாடாடா...”

“என்ன டா...வா?”

“ஏன் வேணாமாடா?”

“யார் சொன்னது? வேணும் வேணும்டி”

“என்ன வேணும்டா?”

“அதுதான் சொல்லீட்டனே! நீ தான் சொல்றாயில்லைடி!”

“எல்லாம் சொல்லீட்டனே! இன்னும் என்ன உனக்கு சொல்லணும்?”

அதுதானே இதை விடவா சொல்ல வேண்டும்? ஆனால் பரதன் எதிர்பார்த்தான்.

அப்போது கோயில் மணி அடித்தது.

“பார்த்தியாடி... மணி வேற அடிக்குது.. நல்ல சகுனம்! இப்பவே சொல்லு.. சொல்லு கௌசல்யா..”

“டேய்... லூசு... கத்தாதடா...”

“என்னது லூசா..??”

“அத விடுடா.. யார்டா மணி அடிச்சது?”

“அட ஓமென்ன.. உன்ட அப்பா வந்திட்டாரோ..?”

கோயில் உட்பிரகார பின் வீதியில் நின்று கதைத்துக் கொண்டு நின்ற இருவருமே பதறி விட்டார்கள்!

யார் அடித்தது ?

*அறிவோம் அடுத்த மாதம்..!*



# யோகா எனும் வெண்ணெய் கைகளில்....

**வே. வதுஸ்சன்**

தற்கால நவீன உலகில் அனைவரினதும் செயற்பாடுகள் மிகுந்த பரபரப்புடனும், வேகமானதாகவும் காணப்படுகின்ற காரணத்தினால் மற்றவர்கள் நலன் குறித்து அக்கறை செலுத்துவதன் ஊடாக மாத்திரமே எமது அன்றாட வாழ்வை செம்மையாக கொண்டு செல்ல முடியும். இதற்கு எம்முடன் துணையாய் இருப்பதும், சுய மேம்பாட்டிற்கான முயற்சியானதும், எமக்கு கிடைத்த வரமுமாய் இருப்பதே யோகாவாகும்.

புரிந்து கொள்ள இயலாத அறிவியலின் அடிப்படையில் உடலுக்கும், மனதுக்கும் மனிதனுக்கும், இயற்கைக்கும் ஓத்திசைவைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்துவதுமான யோகாவானது ஆரோக்கிய வாழ்வின் அறிவியலுக்குமாகத் திகழ்கின்றது. ஏற்றுக்கொள்ளபட்ட முழுமையான முறையின் ஒரு பகுதியாக யோகா உலகம் முழுவதிலும் செயற்பட்டுக் காணப்பட்டு வருகிறது.



இத்தகைய யோகாவை ஓர் வாழ்க்கை முறையாக உள்ளீர்த்துக் கொள்ளும் போது அது வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றியமைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நாம் ஒவ்வொருவரும் சிறந்த ஆளுமையுடன் திகழவேண்டும் என எண்ணுபவர்களாகத்தான் இருக்கின்றோம். ஆனால் அவற்றை அடைவதற்கு துணை செய்பவற்றை அணுக எம்மில் எத்தனை பேர் முயற்சிக்கின்றோம் என்றால் அது மிக அரிதாகவேயுள்ளது. இவ்வாறு முயற்சிக்காது தோல்வியடைந்து விடுகிறோம் என்றும் எனக்கு அதிஸ்டமில்லை என்றும், பிறரால் தான் நான் முன்னேற முடியவில்லை என்றும் பேரம் பேசிக்கொள்வதால் எவ்வித உண்மையோ, பயமோ இங்கு எமக்கு கிடைப்பதில்லை. எனவே எமது சுய முன்னேற்றத்திற்கு



ஏற்றதான வழியை யோகா காண்பிக்கிறது. எம் சாதாரண ஆளுமையை தனித்தன்மை கொண்ட சிறப்பான ஆளுமையாக மாற்ற வல்லதுமாக யோகா விளங்குகின்றது.

தற்கால உலகில் பல்வேறு விதமான சூழ்நிலைகளை தனிமனிதனாக முகங்கொடுக்க வேண்டிய அவசியம் எம் ஒருவொருக்கும் காணப்படுவது நாம் யாவரும் அறிந்ததே. எனவே இச் சந்தர்பங்களில் எழும் வெவ்வேறுபட்ட மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தும் தேவையுடன் சேர்த்து சிறந்த நடத்தையை வெளிப்படுத்தும் நற்சிந்தனையை உருவாக்கிக் கொள்ளும் தேவைப்பாடு அனைவரிற்கும் உண்டு. எனவே இவற்றை ஒருவர் கொண்டிருக்க அல்லது வளர்த்துக் கொள்ள மனஅமைதி இன்றியமையாததாக காணப்படுகிறது. எனவே இவ் மனஅமைதியுடன் கூடிய ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு யோகா சிறப்பாக வழிசமைக்கிறது.

எமக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமல் நினைப்பது பலரில் உண்டு. இதற்கு காரணம் ஆழ சிந்திக்காமையும், அலைபாயும் மனதை கட்டுபடுத்த முடியாமையாகும். எனவே யோகாவின் மூலம் மனதை எளிதாக கட்டுப்படுத்த முடியும். இதனால் எமக்கு ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிவதுடன் எமது பிரச்சினைக்கான தீர்வை நாமே சுயமாக தீர ஆலோசித்து சிறப்பானதாய் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் மனதளவில் நலமாய் இருக்க, உடலளவில் நலத்தை பேண வேண்டும். நாம் நோயின்றி வாழுகின்ற போதே மனதளவிலும் அமைதியாய் வாழ முடியும். எனவே எம்மில் ஏற்படும் பல்வேறு உடல் ரீதியான நோய்கள் உளத்தையும், உளரீதியான நோய்கள் உடலையும் தாக்கக்கூடியன. எனவே இவ்வாறான பலவகையான நோய்களை தடுக்கவும் குறைக்கவும் இல்லாது செய்யவும் யோகா உதவுகிறது. அத்துடன் உள, உடற்செயலியல் மேம்படுத்தலிலும் சிறப்பாய் துணைபுரிகிறது.

அந்த வகையில் யோகாவானது இசைவு, இணக்கம் ஆகியவற்றை



அதிகரிக்கின்றது. தசைகளின் நலத்தையும், வலிமையையும் பேணுகின்றது. சுவாசத்தை சீராக்கி உயர்வீரியத்தை மிகுவிக்கிறது. உடல் எடையை குறைக்கிறது. இதய ரத்த நாளங்களின் திண்மையை பாதுகாக்கிறது. இவை மாத்திரமல்லாது உணர்ச்சி, ஓய்வு மனக்கட்டுப்பாடு, சிரத்தை தெளிவு, ஒழுங்கு படைப்பாற்றல். மன நிறைவு, தன்னம்பிக்கை, மன வலிமை, நேர்மறை, சிந்தனை, வாழ்வின் நோக்கு மற்றும் அர்த்தங்களை புரிதல் போன்ற பல்வேறு எண்ணற்ற நன்மைகளை யோகா எமக்கு அள்ளித்தருகிறது.

ஏனவே தற்கால சூழலில் காணப்படும் தவறான வாழ்க்கை முறைகளினால் ஏற்படும் குறைபாடுகளால் அல்லலுறாமல் நமது வாழ்வை சீர்படுத்தி வாழவும், உடல், உள நோய்களுக்கெதிராக போராடி சமாளிப்பதற்கும், எம்மை நாம் அடையாளங்கண்டு சுய மேம்பாட்டடையவும் ஏனையோருடன் சிறந்த தொடர்பாடலை மேற்கொள்ளவுமாக எமது சிறந்த சிந்தனை மற்றும் நடத்தை மாற்றத்தினூடாக வாழ்க்கையை வெற்றிக்கொள்ள வழிசமைக்கும் யோகாவை நாமும் பின்பற்றி நலமுடன் வளமாய் வாழ்வோமாக.

## ஆச்சரிய நகரம்



சவுதி அரேபியாவின் புதிய மெகா திட்டம் எம்பயர் எஸ்டேட் கட்டிடத்தை விட 20 மடங்கு பெரிய உட்புற சூப்பர் மெகா நகரத்தை உருவாக்குவது ஆகும். சினிமா பாணியில் ஹாலோகிராபிக் தொழில் நுட்பத்தில் ஆச்சரிய நகரத்தை அமைக்கிறது சவுதி அரேபியா.

புதிய திட்டத்திற்கு முகாப் என பெயரிடப்பட்டு உள்ளது. அரபு மொழியில் கன சதுரம் என்று பொருள்படும் முகாப், 400 மீட்டர் உயரம், 400 மீட்டர் அகலம் மற்றும் 400 மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும்,

இது உலகின் மிகப்பெரிய உட்புற நகரமாக இருக்கும். இது அதன் சொந்த உள் போக்குவரத்து அமைப்பைக் கொண்டிருக்கும். விமான நிலையத்திலிருந்து சுமார் 20 நிமிட பயணத்தில் இது இருக்கும். இந்த புதிய நகரம் 104,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள், 9,000 ஓட்டல் அறைகள் மற்றும் பிற வசதிகளுடன் அமையும்.

சுபீனா குணரத்தினம்

# இலங்கையில் மனித உரிமைகள் நிலை என்ன?

சமகால சர்வதேச உலகில் இன்று மனித உரிமைகள் என்ற பதம் முதன்மைப்படுத்தி நோக்கப்படுகின்றது. மனித உரிமை என்பது மனிதர்கள் மனிதனாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான, விட்டுக்கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகள் ஆகும். அடிப்படை உரிமைகள் என்பது மனித உரிமைகளின் ஒரு பகுதியாகும். சமூக, பொருளாதார, அரசியல், குடியியல் உரிமைகள் என்று பல கோணங்களில் இருந்து மனித உரிமைகளை நோக்கினாலும் அவற்றில் மிகவும் இன்றியமையாதது மனிதனின் அடிப்படை உரிமை ஆகும். இவ் அடிப்படை உரிமைகளை ஒவ்வொரு நாடுகளும் தமது அரசியல் அமைப்பினூடாக வரையறை செய்துள்ளனர்.

இலங்கையை பொறுத்த மட்டில் குறுமக்கலம் யாப்பில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை, டொனமூரில் சர்வஜன வாக்குரிமை, சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மையினர் காப்பீடாக அறிமுகப்படுத்தப்பட்ட உரிமைகள் படிப்படியாக 1972, 1978 அரசியல் யாப்புக்களில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் கொண்டுவரப்பட்டது.

இலங்கையில் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் வரையப்பட்டிருப்பினும் இலங்கையில் மனித உரிமைகள் ஆனது ஒரு கேள்விக்குறியாக காணப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் இலங்கையில் மனித உரிமை ஆனது பல்வேறு சவால்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவது ஆகும்.

இலங்கையில் மனித உரிமைகள் எதிர்கொள்ளும் சவால்களைப்பற்றி பார்க்கின்ற போது 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் வரையறுக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான



கருத்துக்களில் உள்ள பலவீனங்கள் முக்கியமானவையாகின்றன.

அதாவது 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் குறித்த சில உரிமைகளை கூறிவிட்டு ஏனைய முக்கியமான சில உரிமைகளை குறிப்பிடாது விட்டமை அவை உரிமைகள் இல்லையா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது. உதாரணமாக உயிர் வாழ்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை போன்றவை நேரடியாக கூறப்படாமை குறிப்பிடத்தக்கது.

அடிப்படை உரிமை மீறப்படின் தனிநபர் மாத்திரமே நிவாரணம் தேட முடியும் மாறாக நிறுவனமாகவோ அல்லது குழுவாகவோ அல்லது ஸ்தாபனமாகவோ நிவாரணம் தேட முடியாமை.

அடிப்படை உரிமை மீறல் சம்பவம் நிகழ்ந்து ஒரு மாத கால இடைவெளிக்குள் நிவாரணம் தேடப்பட வேண்டும் என அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்கால எல்லை நீடிக்கபட முடியாமை ஒரு முக்கிய குறைபாடாகும். இங்கே நிர்வாகத் துறையில் அடிப்படை உரிமை மீறல்களை மேற்கொள்பவர்கள் நிர்வாக கட்டமைப்புக்குள் இருப்பதினால் பலமானவர்களாகவும் மாறாக உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவர் தனிநபராக இருப்பதனால் ப ல வ ீ ன ம ா ன வ ர ா க வு ம் காணப்படுகிறார் இந்நிலையில் ஒரு மாதம் என்ற கால எல்லையானது பலவீனமானவரை மேலும் பாதிப்பதாக அமைகின்றது.

அரச நிர்வாகங்கள் அல்லது அரச ஸ்தாபனங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டால் அன்றி தனிநபர் அல்லது தனியார் நிறுவனங்கள் அடிப்படை உரிமைகளை மீறும் போது அதற்கு நிவாரணம் பெற முடியாது இருத்தல்.
சட்டமா அதிபர் திணைக்களத்தை சார்ந்தவர்கள் அடிப்படை உரிமைகளை மீறுவோரின் சார்பில் ஆஜராகி வாதாடுவதானது அடிப்படை உரிமை மீறலை மேலும் மேலும் தூண்டுவதாக அமைவதோடு அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமைகளை



பேணிப் பாதுகாக்காத தன்மையை குறிப்பாக அமைகின்றது.

மனித ரீதியிலான பரவலாக்கம் இல்லை. இலங்கையில் மனித உரிமை என்பது ஒன்று இருப்பதே சில பாமர மக்களுக்கு தெரியாத நிலை காணப்படுகின்றது இதனால் அவர்கள் உரிமை மேலும் மீறப்படுவதாலும் அவர்களது மனித உரிமைகள் சவாலுக்கு உட்படும் நிலை ஏற்பட இங்கு வழி சமைக்கும்.
இலங்கையில் தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் முழுதாக அடிப்படை உரிமைகளை கேள்விக்கு உட்படுத்தி நடைமுறை சாத்தியமற்றதாகியுள்ளது.

ஒருவருடைய அடிப்படை உரிமை மீறப்பட்டால் அவர் உயர் நீதிமன்றத்திற்கு மாத்திரமே அதற்குரிய நிவாரணங்களை பெற முடியும் மாறாக ஏனைய நீதிமன்றங்களில் பெற முடியாது.

அரசு சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள்



ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

பற்றி எதுவித கருத்துக்களும் உள்ளடக்கப்படவில்லை.

மனித உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்களின் சுறுசுறுப்பற்ற தன்மை.

மதிக்கப்பட்டோருக்கும் சாட்சி களுக்கும் பாதுகாப்பதற்கான எந்த ஒரு நம்பகத் தன்மை உள்ள கட்டமைப்பும் இலங்கையில் இல்லை.

சர்வதேச குற்றங்களை எதிர்கொள்வதற்கு இலங்கையில் உள்ளூர் சட்ட வேலைப்பாட்டில் போதுமற்ற தன்மை.

போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் இலங்கையில் சாதாரணமாக மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக இனவொதுக்கள் குற்றங்கள், அமைதிக்கு எதிரான குற்றங்கள், சாதாரணமான கடத்தல் செயல்பாடுகள்,காணாமல் போதல், கட்டாய ஆள் சேர்ப்பு, கூட்டுத் தண்டனை, இனப்படுகொலை என்கின்ற பல்வேறு விதமான மனித உரிமைகள் மீறல்கள் இலங்கை நாட்டில் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இவ்வாறான ஒரு நிலமையினை இல்லாமல் ஆக்கி இலங்கையில் மனித உரிமை பேணிப் பாதுகாப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். குறிப்பாக மனித உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும், சகலரும் சமமான மனித மான்புடையவர் என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும், மனித உரிமைகள் பேணிப் பாதுகாப்பதில் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும், மத வழிபாட்டுத்தலங்கள், சமூக அமைப்புக்கள், கல்வி நிலையங்கள் இப்பணிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் மேலும் வலிமையான சிவில் சமூகங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும் மேலும் அரசியல் யாப்பில் உரிமைகள் தொடர்பான ஒரு தீர்க்கமான வரையறுக்கப்பட்டதாக நீண்ட சொற்கள் அற்றவிதமாக மாற்றி அமைக்க வேண்டும் இவரான பலமறுசீரமைப்புகளும்





சீர்திருத்தங்களும் இலங்கை நாட்டுக்கு அவசியமாக காணப்படுகின்றது.

முடிவாக இலங்கையில் மனித உரிமை ஆனது ஓரளவு காணப்பட்டாலும் சிறுபான்மையினருக்கு அது முழுதளவில் கிடைக்கப்பெறுகின்றதா என்பது கேள்விக்குறிய விடயமே எனவே தற்காலத்திலும் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி உரிமை மீறப்பட்ட குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதற்கான நிவாரணம் வழங்கி எதிர்காலத்தில் இலங்கையையும் மனித உரிமைக்கு எடுத்துக்காட்டான நாடாக விளங்க வைக்க வேண்டும் என்கின்ற ஒரு பேராசை காணப்பட்டாலும் எதார்த்தம் என்னவோ இலங்கையில் மனித உரிமை என்பது இனரீதியில் பாகுபாடு இருக்கும் வரை முன்னேற்றம் அடையும் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.



# சித்திராங்கதா

55

காவ்யமோகன்

*அரசியல் கைதி*

இனிமையான நாட்கள் மீளுவன இல்லை. அன்று புரவியில் வருணகுலத்தானோடு சித்திராங்கதா வந்த நாள் அவர்கள் இன்பத்தில் மூழ்கித் திளைத்த அந்த நாள் இனி எப்போதும் மீளாது என்று அவர்களிற்கும் தெரியும். ஆனால் அந்த இனிமையான நாளிற்குப் பின் எங்கள் ஆடலரசி சித்திராங்கதா என்ன ஆனார் என்று அறிவீர்களா?

கட்டியணைத்துவிட்டு அவளை விட்டுப் பிரிந்து சென்றான் வருணகுலத்தான் அன்று. வருணகுலத்தான் மனதில் அன்று ஆயிரம் குழப்பங்கள். அவன் குழப்பங்கள் எல்லாம் தெளிந்துவிட்ட நாளில் சித்திராங்கதாவை மீண்டும் ஒருமுறையாவது சந்திக்க நினைத்தான். போரிற்குச் செல்லமுதல் கோப்பாய் நடன கூடத்திற்கு பலமுறை வருணகுலத்தான் வந்து போனான். ஆனால் அவன் நினைத்தது சாத்தியப்படவே இல்லை.

விதியின் துர்ப்பாக்கியம் அவர்கள் காதலில் ஒரு கண்ணாமூச்சி விளையாடிவிட்டது. சித்திராங்கதாவை அவனால் ஒருமுறை கூட காண முடியவில்லை. அப்படி சித்திராங்கதா எங்குதான் இருந்தாள்?

ஒரு பெண் யாரும் எதிர்பார்க்காத ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்க நேர்ந்தால் அதற்கு இரண்டு பெரிய காரணங்களே இருக்க முடியும். ஒன்று இந்த கொடிய உலகம் அவளிற்கு கற்றுக் கொடுத்துவிட்ட ஒரு கசப்பான அனுபவம் . இன்னொன்று அவள் கண்ணெதிரே காண்கின்ற யாரோ ஒருவரின் வாழ்வியல் பாடம். நாம் இவரைப்போல் ஆக வேண்டும் என்கிற ஆசையை விட இவரைப்போல் மட்டும் ஆகிவிடக்கூடாது என்கிற அச்சமே சூழல் பெண்களிற்கு கற்றுக் கொடுக்கின்ற பெரிய பாடம்.

ஒரு நாட்டின் மகாராணியாக இருந்து காதலினால் இன்று கதியற்று நிற்கின்ற இராஜகாமினியை பார்த்துவிட்ட வந்த பரிதாபந்தான் ஒருபுறம் அவளை சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தூண்டிக் கொண்டிருந்தது.

இன்னொருபுறம் தன் மீது நம்பிக்கை இழந்து ஊரார் உழறலை எல்லாம் உண்மை என்று நம்பி நோயில் நலிந்து வைத்தியசாலையே கதியாகிப்போன தந்தை எச்சதத்தர். சித்திராங்கதாவை இனி பார்க்கவே விரும்பவில்லை என்று அன்று சேவகனிடம் சொல்லியனுப்பியுள்ளார் எச்சதத்தர். அது அவள் சற்றும் எதிர்பாராதது. எல்லா சோகமும் ஒன்றுகூட்டி அவளை வெகுவாக சிதைத்துக் கொண்டிருந்தது. பெருந்தனிமை அவளை கொடூரமாக பற்றிக் கொண்டியிருந்த வேளைதான் "தஞ்சை வீரர் போரிற்கு புறப்படுகிறார்." என்ற செய்தியும் அவள் செவிகளை எட்டியது.

அந்த பொழுதில் அந்த செய்தி அவளை எப்படி உருக்குலைத்தது என்று சொல்லுவது எளிதல்ல. தன்னிடம் ஆணையிட்டு சென்ற மணாளன் தன் கருத்தை சற்றும் சிரத்தை கொள்ளாது போரிற்கு புறப்பட முடிவாகிவிட்டார் என்ற செய்தி அவளிற்கு சாதாரணமான வேதனையை வழங்குமா என்ன?

பலமுறை அஸ்வதமங்கலத்தின் கால் குழம்பு ஓசை அவள் நடனகூடத்தை நோக்கி கேட்ட போதெல்லாம் தன்னை தானே மனைக்குள் மறைத்துக் கொண்டாள் சித்திராங்கதா. உள்ளத்துள் குடைகிற போரொலியை தாங்கிக் கொண்டு தன் கண்களிற்கு தானே திரையிட்டுக் கொண்டாள்.

“என் பேச்சை நீ மீறி விட்டாய். பெருங்களங்கம் எனக்கு ஏற்படுத்தி விட்ட நீ என் முகத்தில் கூட நீ முழிக்க எனக்கு சம்மதமில்லை”

என்று உறுதியாக எச்சதத்தர் கூறிவிட்டதாக அன்று சேவகன் வந்து சித்திராங்கதாவிடம் சொன்னான். கூடவே

“அரச ஆணையை மதித்து அதன்படி நடக்க வேண்டும். அன்றில் எனக்கு புத்திரி என்று எவருமில்லை”

என்று அறுதியாக கூறியிருந்தார் எச்சதத்தர்.

தன் தந்தை கூட தன்னை புரிந்து கொள்ளாத அவலத்தை அவள் யாரிடம் சென்று முறையிடுவாள்? அவளிற்கு வேறு யார் இருக்கிறார்கள்? யாரோ ஒருவர் இருந்தார். அவர் தனக்காக எப்போதும் இருப்பார் என்ற நினைப்பில் ஒரு நிம்மதி கொண்டிருந்தாள். ஆனால் அந்த மாவீரமும் தன் பேச்சை- தன் கருத்தை துச்சமென அவமதித்து போரிற்கு புறப்பட்டுவிட்டாராம் என்பதை அவளால் நம்பவும் முடியவில்லை.

“அன்று இராஜகாமினி தேவி எத்தனை விதமாக கூறி எத்தனை உண்மைகளை எடுத்துரைத்தும் என்ன பயன்? தஞ்சை வீரர் போரிற்கு போக முடிவு செய்து விட்டார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அரச ஆணையும், அரச பணியுந் தானே அவரிற்கு பெரிய விடயம்! இன்று நானோ.. என் கருத்தோ... என் காதலோ.. என்று எதுவும் அத்தனை முக்கியமல்ல அவரிற்கு.....

இனி யாரைத்தான் நம்புவது இவ்வுலகில்? யார்தான் துணை எனக்கு?"

என்று அவள் வேதனையில் உருகிக் கொண்டிருக்கும் போதுதான் ஒருநாள் அரண்மனையிலிருந்து சேவகர்கள் இருவர் வந்தனர்.

"சங்கிலிய மகாராஜா பெருவணிகர் எச்சதத்தர் பூரண சுகம் பெறும் வரை சித்திராங்கதா பாதுகாப்பாக அந்தப்புரத்தில் தங்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டதாக கூறினார்கள்.

அதைக் கேட்டதும் சித்திராங்கதா விரக்தியில் சிரித்தாள்.
"இனி இந்த ஆடலரசிக்கு பாதுகாப்பு என்ன வேண்டியிருக்கிறது ? அன்பின் சிறகுகள் அனைத்தையும் பிடுங்கியெறிந்து விட்ட பின் என்ன பாதுகாப்பை வழங்கப்போகிறார் தங்கள் அரசர்? தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த ஜீவனிற்கு பரிதாபம் காட்டுகிறதா உங்கள் பாதுகாப்பு? அந்தப்புரமல்ல எந்தப்புரத்திலும் இந்த சித்திராங்கதா தங்கமாட்டாள். அவளிற்கு எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை என்று போய்ச் சொல்லுங்கள். என் உள்ளத்தை புரிந்து கொள்ளாத இந்த அரசு பாதுகாப்பை மட்டும் அளித்து எதை நிரூபிக்க போகிறார்களாம்? எதுவும் தேவையில்லை என்று சொல்லிவிடுங்கள்!"

என்று சேவகர்களிடம் கூறி அந்த அரச ஆணையை மறுப்பதாய் அறிவித்து விட்டாள் சித்திராங்கதா.

எச்சதத்தர் மேல் கூட அவளிற்கு கோபம் என்று எதுவும் இல்லை. என்ன நடந்தாலும் தன் உள்ளத்து எண்ணம் களங்கமற்றது என்பதை தன்னை உயிராய் வளர்த்த தந்தை புரிந்து கொள்வார் என்று அவள் நம்பியிருந்தாள்.

"என் தந்தைக்கு என்னைக் காட்டிலும் இந்த நாடு தான் பெரிது என்று ஆகிவிட்டதல்லவா? ஏன்? எனக்கு மட்டும் இந்த நாட்டில் அக்கறை இல்லை என்று எண்ணிவிட்டார்? நாட்டு நன்மைக்காகவே அனைத்து காரியங்களை நானும் ஆற்றினேன்? அதை யாரும் இங்கு புரிந்து கொள்ளவில்லையே?"

என்று தனக்குள்ளே எழும் கேள்விகளால் மாண்டு கொண்டிருந்தாள் சித்திராங்கதா.

இந்த நாடு மீது தான் கொண்ட அக்கறையை இனி யாருக்கு எப்படி புரியவைக்கமுடியும் என்பதுதான் அவளிற்கு புரியவில்லை. ஆனால் அவள் புரிதலில் அவளிற்கு எந்தக் குழப்பமும் இல்லை. தன் காதலிலும் எந்த குறையும் அவள் அறியவில்லை. இருப்பினும் வருணகுலத்தான் எதையும் புரிந்து கொள்ளாதது ஏன்? தன் கருத்தை தஞ்சைவீரர் எதற்காக புறந்தள்ளினார்? அன்று அந்தப்புரவியில் கட்டியணைத்தபடி சத்தியம் செய்த மாவீரர் இன்று எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு போரிற்குப் புறப்பட்டு விட்டார் என்பதை அவளால் எந்தக் கோணத்திலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு முறையற்ற வேந்தனின் ஆட்சியால் வீழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டை மீட்க வந்த தஞ்சைப்பெருவீரர் வருணகுலத்தான் என்று அவள் கண்டிருந்த கனவு இப்போது மெல்ல மெல்ல தவிடுபொடியாகிக் கொண்டிருந்தது.

“இனி என்ன ஆகப்போகிறது? பறங்கியருடனான போரில் என்னதான் முடிவு வரப்போகிறது? போரில் வெற்றி வாகை சூடி வருவாரா தளபதி? வரட்டுமே! யாருக்கு வேண்டும் அந்த வல்வரவு? அன்று வாழ்வோர் மகிழ்வாய் அவரிற்கு மாருதவல்லியை மணஞ்செய்து வைப்பர்.. அன்று தேவி இராஜகாமினி கூறியது போல் கோட்டையின் பெருஞ்சொத்தல்லவா மாருதவல்லி. மாமன்னரின் மகளல்லவா அவள். போரில் வெற்றிபெற்றவர்க்கு அப்பெருஞ்சொத்தை பரிசளிப்பர். அரசாள்வோர். நாட்டின் இளவரசியை மணக்க ஆணையிட்டால் மறுப்பாரா தஞ்சை தளபதி? மறுக்கா விட்டால்... மறுக்க முடியவில்லை என்று கூறி விட்டால்.. இந்த ஆடலரசி? அரங்கேற்றமறியாத ஆடலரசி வீணான கற்பனைகளால் வீணாய் போவது தான் விதியா?” என்று அவள் உள்ளம் பலவாறாக குடைந்து கொண்டே இருந்தது.

எல்லாவற்றிற்கும் இனி ஒரே முடிவு தான். தீர்க்கமான அந்த முடிவை மேற்கொள்ள அவள் துணிந்துவிட்ட அந்த நொடிதான் அவளை சிறைபிடிக்க அரண்மனை காவலர்கள் வந்தனர்.

“வீரர்களே! ஈழ நாட்டு முறைசார் வேந்தர் யாரும் மங்கையரை சிறைபிடிக்கும் முறை அறியாதவர்கள். தங்கள் வீரிய வேந்தரிற்கு அம்முறைகள் பற்றிய அறிவு அவ்வளவாய் இல்லை போலிருக்கிறதே. இல்லாவிட்டால் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொல்லுங்கள். இப்படிப் பெருங்களங்கமாற்றாமல் விரைந்து விலகிச் செல்லுங்கள்..” என்று ஏளனத்தோடு சொன்னாள் சித்திராங்கதா.

“பெண்ணே, இது அரச ஆணை.. மீறுவதற்கு உனக்கோ- எமக்கோ உரிமை கிடையாது. நீ எம்முடன் வந்தாக வேண்டும். மீறினாலும் நாம் அழைத்துச் சென்றே ஆக வேண்டும்.”

“ஓகோ.. அந்தளவிற்கு வளர்ந்து விட்டதா உங்கள் வீரம்? ஒரு மங்கையிடம் நீங்கள் அத்தனைபேரும் உங்கள் வலுவை காட்டப்போகிறீர்கள்... அப்படித்தானே? என்னே உங்கள் வீரம்? மெச்சுகிறேன்..”

“பெண்ணே, அதிகம் பேசாதே... நீ இப்போது நாட்டின் அரசியல் கைதி. வீணாக எம் நேரத்தை விரயமாக்காமல் விரைந்து எம்முடன் வந்துவிடு.”

“கைதி! ஆடலரசி சித்திராங்கதாவை இப்போது நல்லை இராச்சியத்தின் அரசியல் கைதி ஆகிவிட்டார்கள் உங்கள் அரசாள்பவர்கள். பிரமாதம்!. கலையை இழிந்து இந்த கலையரசியை சிறைபிடிக்க துணிந்த உங்கள் அரசின் போக்கை பற்றி நான்

பேசுவதற்கே வெட்கமடைகிறேன். காற்றை கைது செய்ய புறப்பட்டு வந்த மூடர்களே, உங்களோடு விவாதிப்பதில் எனக்குத்தான் அவமானம். தாம் ஆற்ற வந்த அருஞ்செயலை ஆற்றுங்கள்! சுற்றி ஊரார் அனைவரும் வேடிக்கை பார்க்கட்டும்! தங்கள் பெருமையும் வீரமும் பார்முழுதும் பரவட்டும்! ம்... இன்னும் ஏன் தாமதம்? வீரர்களே.. இதோ இந்த மங்கையை கைது செய்து அழைத்துச் செல்லுங்கள்." சுற்றி நின்ற அனைவருக்கும் கேட்கும்படு உரத்துக் கூறினாள் சித்திராங்கதா.

வீரர்கள் எதுவும் பேசாமல்- பேச முடியாதவர்களாய் சித்திராங்கதாவை சுற்றி நின்றனர். காவல் வீரர்கள் சூழ சித்திராங்கதா கோட்டை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டாள்.

*தொடர்வாள்...*

# தேனிலவுக்கு விடுமுறை

சீனாவில் பிறப்பு விகிதத்தை அதிகப்படுத்தும் வகையில் புதுமண தம்பதிகளுக்கு தேனிலவு விடுமுறையை ஒரு மாதமாக அதிகரித்து சில மாகாண அரசுகள் அறிவிப்பு வெளியிட்டுள்ளன.

மக்கள் தொகையை கட்டுப்படுத்த சீன அரசு மேற்கொண்ட கடுமையான நடவடிக்கை காரணமாக அந்நாட்டில் பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்து வருவதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் ஆயிரம் தம்பதிகளில் வெறும் 6.77 பேருக்கு மட்டுமே குழந்தை பிறப்பதாக தெரியவந்தது. இதையடுத்து திருமணத்தை ஊக்குவிக்கவும், பிறப்பை விகிதத்தை அதிகப்படுத்தவும் கான்சூ, ஷாங்ஸி உள்ளிட்ட மாகாண அரசுகள் அதிரடி முடிவை எடுத்துள்ளன.

உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்டிருந்த சீனாவில், 1980 மற்றும் 2015-க்கு இடையில், மக்கள் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை அமுல்படுத்திய பிறகு சீனாவின் மக்கள்தொகை கணிசமாக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2022-ம் ஆண்டில், சீனாவில் மிகவும் குறைந்த பிறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.



ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

1

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

ஆய்வுத்தலைப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்கள் மத்தியிலான கொரோனா பற்றிய அறிவுஇ உளப்பாங்கு மற்றும் நடத்தை தொடர்பான ஓர் மதிப்பீடு - வவுனியா வடக்கு ஓமந்தை கோட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூவியல் ஆய்வு.

ஆய்வு அறிமுகமும் பின்னணியும்

கொரோனா வைரஸ் நோய் [Covid-19] ஆனது டிசெம்பர் 2019 இல் சீனாவில் வுகான் நகரில் தோன்றியது. இது உலகளவில் விரைவாகப் பரவியது. 210க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இதன் தாக்கம் அதிகரித்துள்ளது. 2020 மார்ச் 26ஆம் திகதி நிலவரப்படி 23,000க்கும் மேற்பட்ட நோயாளிகளின் இறப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது. முதலிடத்தில் உள்ள நாடுகளில் சீனா இருந்துள்ளது. கொரோனா வைரஸ் நோய்த் தொற்றின் அதிகரிப்பு வுகான் நகரத்தில் உள்ள கீனான் கடல் உணவு சந்தையில் இருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. நேரடி விலங்குகள் உணவாக உட்கொள்ள விற்கப்பட்டன. வைரஸ் தோன்றியதற்கு மற்றொரு ஊகமும் உள்ளது. அமெரிக்கா அல்லது ஐரோப்பாவில் ஆராய்ச்சி ஆய்வகங்கள் ஆரம்பத்தில் இந்த வைரஸ்க்கு [2019-nCovid] எனப் பெயரிட்டனர். பின்னர் சீன ஆராய்ச்சியாளர்களால் இந்த பெயர் [SARS- Cov-2] என மாற்றப்பட்டது. இந்தியா தனது முதல் கொவிட்-19 பதிவினை 2020 ஜனவரி 30அன்று கேரள மாநிலத்தின் காசாரகோடு






நகரில் தெரிவித்துள்ளது. 6மே 2020ற்குள் [WHO- World Health Organization 2020] 49,391 பதிவுகள் [1694 இறப்புக்கள் உட்பட] பதிவாகியுள்ளன. 2020 பெப்ரவரி 15தரவுகளின் படி, சீனாவின் அனைத்து மாகாணங்கள் உட்பட உலகளாவிய அளவில் 67,100 தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

[World Health Organisation-WHO] கொரோனா வைரஸின் தொற்றால் முதலில் உறுதிப்படுத்தப்பட்ட இறப்பு 2020 ஜனவரி 09 அன்று பதிவானது. அன்று முதல் 2020 பெப்ரவரி 15 வரை 1526 இறப்புக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதனை விட அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். அவை கண்டறியப்படவில்லை என்று ஆய்வுகள் மதிப்பிடுகின்றன.

அதுமட்டுமல்லாது 177 நாடுகளில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் நாடு முழுவதும் அல்லது உள்ளூர் அடிப்படையில் மூடப்பட்டு உள்ளன. இது உலக மாணவர் தொகையில் சுமார் 98.65 சதவீதத்தினரை பாதித்துள்ளது. ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ஆசிய பசுபிக் பகுதிகளில் பல நாடுகள் இத்தொற்றுக்களைப் பதிவு செய்தன. இத் தொற்றின் அறிகுறிகள் தோன்றுவதற்கு 2 முதல் 14 நாட்கள் வரை இருக்கலாம். இத் தொற்று நோய்க்கு அறியப்பட்ட தடுப்புசி அல்லது குறிப்பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை மற்றும் ஆதரவு ஆகியனவையே முதன்மை சிகிச்சைகளாக உள்ளன.

2020 மார்ச் 12அன்று கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. கொரோனா வைரசுக்கு எதிராக அவசர மற்றும் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டணியோ குட்டரெஸ் அறிவுறுத்தினார். 2021 ஜனவரி 21 அன்றைய நிலவரப்படி, 188 நாடுகளில் 8,64,12,620 பேர் பாதிக்கப்பட்டு, இவற்றுள் 18,68,893 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 4,84,66,498 பேர் மீண்டு வந்துள்ளனர். இதில் ஐக்கிய அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. [WHO- World



Health Organization].

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சகம் இலங்கைக்கான [WHO- World Health Organization] அலுவலகத்துடன் இணைந்து கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலம் இந்தத் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது. 2020 ஜனவரி 26ஆம் திகதி நாட்டிற்குள் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு ஒரு தேசிய நடவடிக்கைக் குழு நியமிக்கப்பட்டது. இத்தாலிய சுற்றுலாப் பயணிகளுடன் பணிபுரிந்த ஒரு சுற்றுலா வழிகாட்டியான 2020 மார்ச் 10ஆம் திகதி முதல் இலங்கையின் உள்ளூர் நாட்டு நேர்மறையானவர் [ Positive] என்று உறுதிப்படுத்தப்பட்டது.

மார்ச் 23ஆம் திகதி நிலவரப்படி தொற்று நோயை எதிர்த்துப்போராடுவதற்காக இலங்கை இராணுவத்தால் 40 இற்கும் மேற்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் நிறுவப்பட்டன. நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளாக திருப்பி அனுப்பப்பட்ட மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் தனிமைப் படுத்தப்பட்ட மையங்களில் இரண்டு வாரங்களிற்கு தனிமைப் படுத்தப்பட்டனர். மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான வருகை வீசா அரசால் இடைநீக்கம் செய்யப்பட்டது. ஆரம்பகாலப் பயணத்தடைகள் மற்றும் நாட்டிற்கான நுழைவுப்புள்ளிகளை மூடுவது நோயாளிகளின் வருகையிலிருந்து நாட்டைப் பாதுகாத்தது.

தொற்று நோயைக் கையாள்வதில் இலங்கை சில உத்திகளை கடைப்பிடித்தது. இது குறைந்த தொற்று வீதத்திற்கும், இறப்பு விகிதத்திற்கும் வழிவகுத்தது. கொவிட் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும். அனைத்து நோயாளிகளும் ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிராந்திய தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டனர். குறிப்பாக சுவாசக் கோளாறு இருக்கும் போது மட்டுமே நோயாளிகளை மருத்துவ மனைகளில் அனுமதித்தனர். நோயாளி நோய்த்தொற்றுக்கு சாதகமாகிவிட்டால், வெளியில் உள்ள தொடர்புகளைத் துண்டித்து, முழு மாவட்டத்திலும் ஊரடங்கு உத்தரவு விதித்து, மாவட்டங்களுக்கிடையேயான





பயணங்களைத் தடை அமுல்ப்படுத்தப்பட்டது.

இந்த வைரஸ் பெரும்பாலும் மக்களிடையே நெருக்கமான தொடர்பின் போது, இருமல், தும்மல், மற்றும் பேசுவது ஆகியவற்றின் மூலம் உருவாகும். சிறிய நீர்த்துளிகள் வழியாகப் பரவுகிறது. இந்த நீர்த்துளிகள் வழக்கமாக நீண்ட தூரம் காற்று வழியாகப் பயணிப்பதை விட தரையில் அல்லது மேற்பரப்பில் விழுகின்றன. சில நேரங்களில், தொற்றுள்ள மேற்பரப்பைத் தொட்டுவிட்டு, பின்னர் தங்களின் முகத்தைத் தொடுவதன் மூலமாகவும், மக்களுக்குத் தொற்று ஏற்படக்கூடும். அறிகுறிகளைக் காட்டாத மக்களிடத்திலிருந்து தொற்றுப்பரவ சாத்தியம் உள்ளது. இதுதவிர, சமூக ஊடகங்கள் தொடர்ந்து கொரோனா பற்றிய போலிச் செய்திகள் மற்றும் கட்டுக் கதைகளை பரப்பியமை பொதுமக்களை மேலும் தொந்தரவு செய்தது. [ Patel, 2020, Laetal,2020 : Brindha etal, 2020].

பரிந்துரைக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளில் கைகழுவுதல், இருமும் போது ஒருவர் தம் வாயை மூடுவது, மற்றவர்களிடமிருந்து தூரத்தை பராமரித்தல், பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் நபர்களைக் கண்காணித்தல் மற்றும் சுய தனிமைப்படுத்துதல் ஆகியவை அடங்கும். இதனால் உலகெங்கிலும் உள்ள அரச தலைவர்கள் தங்கள் நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள், ஊரடங்கு பணியிட முன்னெச்சரிக்கை கட்டுப்பாடுகள் மற்றும் வசதிகளை மூடல் ஆகிய நடவடிக்கைகளைச் செயல்படுத்தினர். சோதனைத் திறனை அதிகரிக்கவும், பாதிக்கப்பட்ட நபர்களின் தொடர்புகளைக் கண்டறியவும் பலர் பணியாற்றியுள்ளனர்.

Covid-19 தொற்று காரணமாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்லூரிகளில் கிட்டத்தட்ட ஜனவரி 12, 2021 நிலவரப்படி சுமார் 825மில்லியன் கற்பவர்கள் பாதிக்கப்பட்டனர் [UNICEF]. Covid -19 இன் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பள்ளி மூடல்கள்



காரணமாக ஒரு பில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் பின்தங்கிய அபாயம் இருந்தது.

188 நாடுகளில் [ஏப்ரல் 2020] நிலவரப்படி பள்ளி மூடப்பட்ட நிலையில் அவர்களில் பலர், இணையம், தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியான கல்வியை வழங்குவதற்கான மாற்று வழிகளை உருவாக்கினர். இருப்பினும், இந்த தொழில்நுட்பங்களுக்கான அணுகல் பல குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில், குறிப்பாக ஏழை வீடுகளில் சிரமமாக உள்ளது. உலகின் குழந்தைகள் கற்க, நாடுகள் தொலை நிலை கல்வி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. ஆயினும் உலகின் பல குழந்தைகள் குறிப்பாக ஏழ்மையான வீடுகளில் உள்ளவர்களுக்கு இணைய அணுகல், தனிப்பட்ட கணினிகள், தொலைக்காட்சிகள் அல்லது வீட்டில் வானொலியும் இல்லாத நிலையில் கற்றல் ஏற்றத்தாழ்வுகளின் விளைவுகள் அதிகரித்தது. வீட்டு அடிப்படையிலான கற்றலுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை






அணுக முடியாத மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர மட்டுப்படுத்தப்பட்ட வழிமுறைகளைக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் பாடசாலை மாணவர்களிடையே கொரோனா குறித்த அச்சம் காணப்படுகின்றது இதே போன்று மாணவர்களின் பாடசாலைச் சூழலும் கொரோனா குறித்த மாணவர்களின் அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பவற்றில் தாக்கம் செலுத்துகின்றன. நண்பர்களின் சேர்க்கை, கொரோனா குறித்த ஆசிரியர்களின் கருத்து நிலை, தெரிவு செய்யும் பாடம், கட்டுப்பாட்டுத் தளர்வு போன்றன இதில் முக்கியமானவை. கொரோனா நோய் பரவல் குறித்த தவறான புரிதல் கொண்ட நண்பர்களின் சேர்க்கையானது கொரோனா பற்றிய சரியான தகவல்களை தெரிந்து கொள்வதிலும் உளப்பாங்கிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

*ஆராய்வோம்...*




எஸ்.எஸ்.நுஜன்

# ஆரம்பிக்கிறது...

தற்போது உலகளவில் மகளீர் துடுப்பாட்டத்தை பிரபலப்படுத்த பலதரப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு மைற்கல்லாக மாறியுள்ளது் இந்திய கிரிக்கெட் வாரியம் ஆரம்பித்துள்ள “மகளீர் பிரீமியர் லீக்“ (WPL). அதிக துடுப்பாட்ட ரசிகர்களை கொண்டிருப்பதால் துடுப்பாட்ட போட்டிகளின் சந்தையாக உள்ள இந்தியாவில் ஆண்களுக்கென இந்தியன் பிரீமியர் லீக் (IPL) இருப்பது போன்று அதே போன்ற ஒரு தொடர் பெண்களுக்கும் நடாத்த வேண்டும் என்பது நெடுநாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இருப்பினும் 2018 இல் ஒரு போட்டி கொண்ட தொடராக ஆரம்பிக்கப்பட்டு, கடந்த மூன்று வருடங்களாக IPL இறுதி போட்டிகளுக்கு முன்னதாக மூன்று அணிகள் கொண்ட ஒரு மகளீர் தொடராக நடந்து வந்த நிலையில் தற்போது பெங்களூரு டெல்லி மும்பை அஹமதாபாத் லக்னோ எனும் ஐந்து இடங்களை மையப்படுத்தி ஐந்து அணிகள் கொண்ட தொடராக உருவெடுத்துள்ளது. இதற்கான அணி வீரர்களுக்களை தேர்வு செய்வதற்கான ஏலமானது, கடந்த மாதம் 13 ம் திகதி நடைபெற்றது.

ஒவ்வொரு அணியும் இந்திய ரூபாய் மதிப்பில் பன்னிரண்டு கோடிகளை செலவு செய்து அதிகபடியாக 18 மற்றும் குறைந்தது 15 வீரர்களை எடுக்கமுடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு இருந்தது. இதனுள் ஆறு வீரர்கள் பிற நாட்டு வீரர்களாக இருக்கமுடியும். முன்னதாக இந்த ஐந்து அணிகளின் உரிமையாளருக்கான ஒப்பந்தம் கோரப்பட்டு, பெங்களூரு டெல்லி மும்பை அணிகளை முறையே 901, 810, 912.99 கோடிகளை கொடுத்து



அதன் IPL அணி உரிமையாளர்களே வாங்கிய நிலையில், அஹமதாபாத் அணியை அதானி குழுமம் 1289 கோடிகளையும் லக்னோ அணியை கேப்ரி குளோபல் 757 கோடிகளையும் கொடுத்து வாங்கியிருந்தனர். அவ் அணிகளின் பெயர் மற்றும் தலைமை பயிற்சியாளர் விபரம் வருமாறு:

பெங்களூரு - றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - பென் சவ்யேர்,
டெல்லி - டெல்லி கேபிட்டல்ஸ் - ஜொனாதன் பேட்டி,
மும்பை - மும்பை இந்தியன்ஸ் - சார்லோட் எட்வர்ட்ஸ்,
அஹமதாபாத் - குயரத் கியன்ட்ஸ் - ராக்கேல் ஹெய்ன்ஸ்,
லக்னோ - உபி வாரியர்ஸ் - ஜான் லெவிஸ்.

இதை விட ஆலோசகர்களாக முன்னாள் இந்திய அணித் தலைவியான மித்தாலி ராஜ், குயரத் கியன்ட்ஸ் அணிக்கும் இந்தியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஜகுலன் கோஸ்வாமி, மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், இந்திய டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா, றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கும் நியமிக்க பட்டுள்ளனர்.




இந்த வீரர்கள் ஏலத்தில் அதிக விலைக்கு இந்திய ஆரம்ப மட்டையாளரான ஸ்மிரிதி மந்தனா, 3.40 கோடிகளுக்கு பெங்களூரு அணியால் வாங்கப்பட்டிருந்தார். அவருக்கு அடுத்த படியாக தலா 3.20 கோடிகளுக்கு ஆஸ்திரேலியாவின் அதிரடி சகலதுறை வீராங்கனையான அஷ்லேயி கார்ட்னர், குயரத் கியன்ட்ஸ் அணியாலும் இங்கிலாந்தின் அதிரடி சகலதுறை வீராங்கனையான நடாலி சிவேர் மும்பை இந்தியன்ஸ் அணியாலும் வாங்கப்பட்டு இருந்தனர். உபி வாரியர்ஸ், இந்தியாவின் தீப்தி சர்மா வினை 2.60 கோடிகளுக்கும் டெல்லி கேபிட்டல்ஸ், மற்றுமொரு இந்திய வீராங்கனையான ஜெமிமாஹ் ரோட்ரிகோஸ் இனை, 2.20 கோடிகளுக்கும் வாங்கப்பட, தலா 2 கோடிகளுக்கு ஆஸ்திரிலியாவின் ஆரம்ப ஆட்டக்கரரான பெத் மூனியினை குஜராத் கியன்ட்ஸ் அணியும் இந்தியாவின் இளம் வீராங்கனையான ஷபாலி வர்மாவினை டெல்லி கேபிட்டல்ஸ் அணியும் அடுத்தபடியான அதிக விலையில் ஏலமெடுத்தனர்.

றோயல் சேலஞ்சர்ஸ் அணியால் 1.7 கோடிகளுக்கு வாங்கப்பட்ட ஆஸ்திரேலிய மகளீர் அணியின் சகலதுறை வீராங்கனையும் ஐசிசி 2010-2020 தசாப்தத்தின் சிறந்த துடுப்பாட்ட வீராங்கனையுமான எல்ஸ் பெர்ரி, “எனது கண்ணோட்டத்தில், பண மதிப்பின் அடிப்படையில் எங்களில் யாரும் உரையாடலை முன்னெடுத்ததாக நான் நினைக்கவில்லை. இதைவிடப்

பெரியது ஏதோ இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாக, ஊதியம் மற்றும் அந்த வகையான பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு அற்புதமானது, ஆனால் அதைவிடப் பெரியது உலகெங்கிலும் உள்ள விளையாட்டின் பொதுவான வளர்ச்சி என்று நான் நினைக்கிறேன். இந்தியா ஒரு வகையானது, நிறைய உணர்வுகளில் கிரிக்கெட்டின் ஆன்மீக இல்லம். இப்போது பெண்கள் இந்திய சந்தையிலும் இந்திய விளையாட்டிலும் மிகவும் வலுவான இருப்பைத் தொடங்கியுள்ளனர் என்று நான் நினைக்கிறேன், இதுவானது எந்தவொரு வீரரின் மீதும் வைக்கப்படும் எந்த விதமான டாலர் மதிப்பையும் விட முக்கியமானது.” இது தொடர்பாக கூறினார்.



## மும்பை இந்தியன்ஸ்

மட்டையாளர்கள்: ஹர்மான்ப்ரீட் கவுர் (இந்தியா, 1.60 கோடி), அமஞ்சோட் கவுர் (இந்தியா, 50 லட்சம்), தாரா குஜ்ஜார் (இந்தியா, 10 லட்சம்), சைகா இஸ்ஹாயூ (இந்தியா, 10 லட்சம்), பிரியங்கா பாலா (இந்தியா, 20 லட்சம்), மற்றும் நீலம் பீஸ்ட், (இந்தியா, 10 லட்சம்).

சகலதுறையாளர்கள்: நடாலி சிவேர் (இங்கிலாந்து, 3.20 கோடி), அமெலியா கெர் (நியூஸிலாந்து, 1.00 கோடி), Pooja Vastrakar (இந்தியா, 1.90 கோடி), ஹெதர் கிரகாம் (ஆஸ்திரேலியா, 30 லட்சம்), ஹயலே மத்தியூஸ் (வெஸ்ட் இண்டீஸ், 40 லட்சம்), சோலி ட்ரியன் (சவுத் ஆப்பிரிக்கா, 30 லட்சம்), "ஹுமைரா கஜி (இந்தியா, 10 லட்சம்), மற்றும் ஜிண்டமணி கலிட (இந்தியா, 10 லட்சம்)

பந்து வீச்சாளர்கள்: இஸி வோங் (இங்கிலாந்து, 30 லட்சம் மற்றும் சோனம் யாதவ் (இந்தியா, 10 லட்சம்).

இலக்கு காப்பாளர்: யஸ்டிக பாடிய (இந்தியா, 1.50 கோடி).






## டெல்லி கேபிட்டல்ஸ்

மட்டையாளர்கள்: ஜெமிமாஹ் ரொட்ரிகோஸ் (இந்தியா, 2.20 கோடி), மெக் லென்னிங் (ஆஸ்திரேலியா, 1.10 கோடி), ஷபாலி வர்மா (இந்தியா, 2 கோடி), அலிஸ் கேப்செய் (இங்கிலாந்து, 75 லட்சம்), லாரா ஹாரிஸ் (ஆஸ்திரேலியா, 45 லட்சம்) மற்றும் ஜெசியா அக்தார் (இந்தியா, 20 லட்சம்).

சகலதுறையாளர்கள்: ராதா யாதவ் (இந்தியா, 40 லட்சம்), மரிசன்னே கா.்.ப் (சவுத் ஆப்பிரிக்கா, 1.5 கோடி), ஷிகா பாண்டே (இந்தியா, 60 லட்சம்), சினேகா தீப்தி (இந்தியா, 30 லட்சம்), அருந்ததி ரெட்டி (இந்தியா, 30 லட்சம்) மற்றும் மின்னு மணி (இந்தியா, 30 லட்சம்).

பந்து வீச்சாளர்கள்: டிடாஸ் சாது (இந்தியா, 25 லட்சம்), தாரா நோரிஸ் (அமெரிக்கா, 10 லட்சம்), பூனம் யாதவ் (இந்தியா, 30 லட்சம்), மற்றும் ஜெஸ் ஜனஸ்ஸன் (ஆஸ்திரேலியா, 50 லட்சம்).

இலக்கு காப்பாளர்: தனியா பாடிய (இந்தியா, 30 லட்சம்), மற்றும் அபர்ணா மோன்டால் (இந்தியா, 10 லட்சம்).

## குஜராத் கியன்ட்ஸ்

மட்டையாளர்கள்: சோபியா டங்கலி (இங்கிலாந்து, 60 லட்சம்), ளு மேகனா (இந்தியா, 30 லட்சம்), மற்றும் னு ஹேமலதா (இந்தியா, 30 லட்சம்).

சகலதுறையாளர்கள்: அஷ்லேயி கார்ட்னர் (ஆஸ்திரேலியா, 3.20 கோடி), அன்னாபெல் சதர்லேண்ட் (ஆஸ்திரேலியா, 70 லட்சம்), ஹர்லீன் தியோல் (இந்தியா, 40 லட்சம்), டீன்ட்ரா டொட்டின் (வெஸ்ட் இண்டீஸ், 60 லட்சம்), மோனிகா படேல் (இந்தியா, 30 லட்சம்), ஹரிலே காலா (இந்தியா, 10 லட்சம்) மற்றும் அஸ்வனி குமாரி (இந்தியா, 30 லட்சம்).

பந்து வீச்சாளர்கள்: ஸ்நேஹ் ராணா (இந்தியா, 75 லட்சம்), ஜோர்ஜியா வராஹம் (ஆஸ்திரேலியா, 75 லட்சம்), மான்சி ஜோஷி (இந்தியா, 30 லட்சம்), தனுஜா கன்வெர் (இந்தியா, 50 லட்சம்), பருணிகா சிசோடியா (இந்தியா, 10 லட்சம்), மற்றும் ஷாப்னம் ஆனு (இந்தியா, 10 லட்சம்).

இலக்கு காப்பாளர்: பெத் மூனே (ஆஸ்திரேலியா, 2.00 கோடி) மற்றும் சுஷ்மா வர்மா (இந்தியா, 60 லட்சம்)

## றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு

மட்டையாளர்கள்: ஸ்ம்ரிதி மந்தனா (இந்தியா, 3.40 கோடி), கனிகா அஹுஜா (இந்தியா, 35 லட்சம்), ஆஷா ஷோபனா (இந்தியா, 10 லட்சம்), ஷ்ரேயங்க பட்டீல் (இந்தியா, 10 லட்சம்), மற்றும் திஷா கசாட் (இந்தியா, 10 லட்சம்).

சகலதுறையாளர்கள்: எல்லிஸ் பெர்ரி (ஆஸ்திரேலியா, 1.70 கோடி), சோபிய டேவின் (நியூஸிலாந்து, 50 லட்சம்), எரின் பேர்ன்ஸ் (ஆஸ்திரேலியா, 30 லட்சம்), ஹெதர் நைட் (இங்கிலாந்து, 40 லட்சம்), டேன் வான் நியேகேரக் (சவுத் ஆப்பிரிக்கா, 30 லட்சம்)





மற்றும் பூனம் ஹெம்னார் (இந்தியா, 10 லட்சம்)

பந்து வீச்சாளர்கள்: ரேணுகா சிங் (இந்தியா, 1.50 கோடி), ப்ரீதி போஸ் (இந்தியா, 30 லட்சம்), கோமல் சான்சத் (இந்தியா, 25 லட்சம்), மேகன் ஸ்சுட் (ஆஸ்திரேலியா, 40 லட்சம்) மற்றும் சஹானா பவார் (இந்தியா, 10 லட்சம்)
இலக்கு காப்பாளர்கள்: ரிச்சா ஹோஷ் (இந்தியா, 1.90 கோடி), மற்றும் இந்திராணி ரோய் (இந்தியா, 10 லட்சம்)

### உ பி வாரியர்ஸ்

மட்டையாளர்கள்: கிரண் நவகிரே (இந்தியா, 30 லட்சம்), மற்றும் சிம்ரன் ஷைஹ் (இந்தியா, 10 லட்சம்).

சகலதுறையாளர்கள்: தீப்தி சர்மா (இந்தியா, 2.60 கோடி), சோபிய ஏசிலெஸ்டொனே (இங்கிலாந்து, 1.80 கோடி), தேவிகா வைத்யா (இந்தியா, 1.4 கோடி), தஹலை மெக்ராத் (ஆஸ்திரேலியா, 1.40 கோடி), சுவேதா செஹ்ரவாட் (இந்தியா, 40 லட்சம்), மற்றும் பர்ஷாவி சோப்ரா (இந்தியா, 10 லட்சம்).

பந்து வீச்சாளர்கள்: ஷாப்நிம் இஸ்மாயில் (சவுத் ஆப்பிரிக்கா, 1.00 கோடி), கிராஸ் ஹாரிஸ் (ஆஸ்திரேலியா, 75 லட்சம்), அஞ்சலி சர்வானி (இந்தியா, 55 லட்சம்), ராஜேஸ்வரி கையக்வாட் (இந்தியா, 40 லட்சம்), லாரன் பெல் (இங்கிலாந்து, 30 லட்சம்), ஶ யஷாஸ்ரீ (இந்தியா, 10 லட்சம்), மற்றும் லட்சுமி யாதவ் (இந்தியா, 10 லட்சம்)

இலக்கு காப்பாளர்: அலிஸ்ஸா ஹீலி (ஆஸ்திரேலியா, 70 லட்சம்)

2023க்கான முதல் தொடர் இம்மாதம் மும்பை மற்றும் நவிமும்பை யில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் போது ஐந்து அணிகளும் தமக்கிடையே தலா இரு ஆட்டங்கள் வீதம் 20 லீக் ஆட்டங்கள் நடைபெறும். இதன் இறுதியில் முதல் இடம் பெறும் அணி நேரடியாக இறுதி போட்டிக்கு முன்னேற இரெண்டாம் மற்றும் மூன்றாம் அணிகளுக்கு இடையே நடைபெறும் ஆட்டத்தில் வெல்லும் அணியானது இரெண்டாவது அணியாக இறுதி போட்டிக்கு முன்னேறும். 2026 ம் ஆண்டிலிருந்து 33/34 ஆட்டங்களாக அதிகரிக்கப்படுமென கூறப்பட்டுள்ளது.

